# காலி மரபுரிமை மன்றம் - 2012

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, காலி மரபுரிமை மன்றத்தின் 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

2006, 2008 ஆம் ஆண்டுகளில் கொள்வளவு செய்யப்பட்ட ரூபா 723,100 கூட்டுத்தொகையுடைய நிலையான சொத்துக்கள் தேய்மானத்திற்குள்ளாகிய பின்னர் பெறுமதி பூச்சியமாகிய போதும், அவை பாவனையில் உள்ளமையால் அச் சொத்துக்களை மீள மதிப்பீடு செய்து புத்தகங்களில் இடவில்லை.

#### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

இந்திய ‘‘களரி’’ செயற்திட்டத்திற்கு 2012 ஏப்ரல் மாதத்தில் இந்திய உயர் ஸ்தானிகர் அலுவலகத்தால் வழங்கப்பட்ட 16 சங்கீத உபகரணங்களின் பெறுமதி கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பயன்படுத்த முடியாத 71 பொருட்களை 2013 மார்ச் 27 ஆந் திகதிக்கு முன்னர் புத்தகங்களில் பதிவழிக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்ட போதும், இது தொடர்பாக நிதிப் பிரமாணம் 109 இற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான மன்றத்தின் நிதிக்கூற்றுக்களது விளைவானது, நன்கொடையாளர்களது பெறுவனவுகள் அடங்கலாக ரூபா 545,882 மிகையாகும். இதற்கெதிரான முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 598,778 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நிதிசார் விளைவுகளில் ரூபா 1,144,660 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. அமைச்சிலிருந்து பெறப்பட்ட தொகை முன்னைய ஆண்டைவிட ரூபா 1,300,000 அதிகரித்ததே அந்த அதிகரிப்பிற்கு முக்கிய காரணமாயிற்று.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்திறன்

மீளாய்வாண்டிற்கெனத் தயாரிக்கப்பட்ட செயல் திட்டத்தின் பிரகாரம், கீழே இலக்கிடப்பட்டவற்றை நிறைவேற்ற முடியாதுபோயிற்று.

(அ) காலியில் உள்ள கோட்டையைப் பார்க்க வரும் சுற்றுலாப் பயணிகளின் உபயோகத்திற்கான கழிவறைத் தொகுதியை நிர்மாணித்தல்.

(ஆ) ''இந்திய கலரி செயற்திட்டத்தை'' ஆரம்பித்தல்

**3.2 செயற்பாட்டு வினைத்திறமையின்மை**

**பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

(அ) காலி கோட்டையின் உள்ளே அசைவன மற்றும் அசையாதனவற்றை படம் பிடிப்பதற்கு கட்டணம் செலுத்தி அனுமதி பெறப்பட வேண்டும். எனினும், அவ்வாறு அனுமதி பெறுவதற்கும் அனுமதி பெறப்படாத படப்பிடிப்பை பரீசீலிப்பதற்கும் வார இறுதி மற்றும் அரச விடுமுறை நாட்கள் அடங்கலாக முறையான நிகழ்ச்சித்திட்டம் எதுவும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) காலி கோட்டையின் உள்ளே சுற்றுலாப் பயணிகளுக்கு வழிகாட்டுவதற்காக வழிகாட்டுபவர்களைப் பயிற்றுவித்து சுற்றுலாப் பயணிகளைக் கவரும் விதத்தில் விளக்கமளித்து சுற்றுலாப் பயணிகளுக்குப் பாதுகாப்பு வழங்குவதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பழைய காலி கோட்டையில் நிறுவப்பட்டுள்ள காலி மரபுகள் மன்ற அலுவலகம் வக்வெல்ல வீதியிலிருந்து ஏறக்குறைய 02 கிலோமீட்டர் தூரத்தில் அமைந்துள்ள தனியார் கட்டிடம் ஒன்றில் மாதாந்தம் ரூபா 30,000 வாடகைப்படி 2012 டிசெம்பர் 03 தொடக்கம் நிறுவப்பட்டிருந்தமையால் எதிர்பார்த்த நடவடிக்கைகளையும் கடமைகளையும் நிறைவேற்றுவதில் பின்வரும் தடைகள் ஏற்பட்டிருந்தன.

(i) காலி மரபுரிமை மன்றம் நிறுவப்பட்ட 1994 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க காலி மரபுரிமை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்ட காலி கோட்டை மற்றும் அங்குள்ள சரித்திரபூர்வமிக்க பழமைமிக்க பூமியை அபிவிருத்தி செய்தல், பாதுகாத்தல், தரிசிப்பதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் என்பவற்றுடன் அங்கு வாழ்பவர்களது சாதாரண நலனோம்பல் வசதிகளை மேம்படுத்துதல் போன்ற நோக்கங்களை நிறைவேற்றுகையில் அலுவலகமானது காலி கோட்டையிலிருந்து தொலைவில் அமைந்திருத்தல்.

(ii) காலி கோட்டையில் நடைபெறும் அத்துமீறிய நிர்மாண வேலைகளைப் பரிசீலித்தல், கோட்டையில் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் அத்துமீறிய படப்பிடிப்பு நடைபெறுதல் போன்ற நடவடிக்கைகளின் போது கவனிக்கப்படாதுவிடுவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகரித்தல்.

(iii) காலி மரபுரிமைக்குரிய 1193 புத்தகங்கள் அடங்கிய நூலகம், புத்தகங்கள் மற்றும் காலி கோட்டையின் அச்சிடப்பட்ட தகவல்களின் விற்பனை நடைபெறும் நிலையம் போன்ற நிறுவனங்கள் காலி கோட்டைக்கு வெகு தூரத்தில் அமைக்கப்பட்டுள்ளமையால், அவற்றைப் பயன்படுத்தும் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுடன் காலி கோட்டையில் வசிப்பவர்களுக்கும் சிரமம் ஏற்படுதல்.

### 3.3 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடுகள்

காலி கோட்டையின் பிரதீபாகருக்கு அண்மையில் குளிப்பதற்கும், ஆடை மாற்றுவதற்கும் 2 அறைகளை நிர்மாணிப்பதற்கென 2008 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டு அதன் ஒரு பகுதி நிர்மாணிக்கப்பட்டதால் பின்னர் நிர்மாண வேலை கைவிடப்பட்டிருந்தது. இது காலி கோட்டையின் பழம்பெரும் தோற்றத்திற்குப் பாதிப்பை ஏற்படுத்தியிருந்ததுடன் அவற்றை அகற்றுவதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 தாமதமாகிய செயற்திட்டம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமான பழைய துறைமுகத்திற்கு அருகே படகுகள் வரக்கூடிய விதத்தில் பழைய துறைமுகமும் அதன் சுற்றுப்புறத்தையும் தயார்படுத்துவதற்காக ரூபா 452,100 இற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு 8 மாதங்களுக்குள் வேலையை முடிப்பதற்கு சமுர்த்தி சங்கம் ஒன்றுடன் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்ட போதும், அது குறித்தவாறு முடிவடையாமையால் எதிர்பார்த்த படகுச் சேவையை ஆரம்பிக்க முடியாதிருந்தது.

(ஆ) காலி கோட்டையில் முக்கியமாகப் பாதுகாக்கப்பட வேண்டிய இடமாகிய நட்சத்திர அட்டாளை, ஏலூஸ் அட்டாளை, டிரைடன் யுத்த அறை என்பவற்றினது பாதுகாப்பு நடவடிக்கைகள் இதுவரை நடைபெற்றிருக்கவில்லை. நட்சத்திர அட்டாளைக்கருகே தொல்பொருள் திணைக்களத்தின் கழிவுப் பொருட்கள் முறையற்றவாறு குவித்து வைக்கப்பட்டிருந்தன.

## 3.5 பதவியணியினர் நிர்வாகம்

காலி மரபுகள் மன்றத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரது எண்ணிக்கை 19 ஆகும். 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 08 வெற்றிடங்கள் நிலவின. 05 செயற்திட்ட உதவியாளர் பதவிகளில் 03, உம் 04 முகாமைத்துவ உதவியாளர் பதவிகளில் 02, உம் 04 பாதுகாப்புக் காவலாளிகள் பதவிகளில் 02, உம் செயற்திட்ட உதவியாளர் (கணக்கு) பதவி என்பன வெற்றிடங்களாக உள்ளன.

## 4. கணக்களிதகைமையும் ஆளுமையும்

மன்றத்தில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு அமைக்கப்படவில்லை அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டு நிதிப் பிரமாணம் 134(3) இற்கமைய உள்ளகக் கணக்காய்வு அறிக்கையிள் பிரதி ஒன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு நலிவுகள் அவ்வப்போது மன்றத்தின் தலைவரது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) இருப்புக் கட்டுப்பாடு